# இராசிபுரம் நகராட்சி

## நகர்மன்ற சாதாரணக் கூட்ட அறிவிப்பு

2022–ஆம் வருடம் ஜூலை மாதம் 26–ஆம் தேதி செவ்வாய் கிழமை முற்பகல் 11.30 மணிக்கு இராசிபுரம் நகராட்சியின் சாதாரணக் கூட்டம் ஒன்று நகர்மன்ற கூட்ட அரங்கில் நடைபெறவுள்ளது.

அதுசமயம் கீழ்க்கண்டப் பொருள்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

இராசிபுரம் நகராட்சி
நாள் : 22.07.2022

தலைவர்,
நகர் மன்றம்.

## பொருள்கள்

(1) இராசிபுரம் நகராட்சியின் மாண்புமிகு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களது அரசின் ஓராண்டு சாதனை விவரங்களை மாலை தமிழகம் மலரில் வெளியிட்டதற்கான விளம்பரக் கட்டணம் ரூ. 14700.00 செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருற்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது.

**அலுவலகக்குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்.

(1337/2022/இ1)

**தீர்மானம் எண். 130**

அனுமதிக்கப்பட்டது.

(2) இந்நகராட்சி பொறியியல் பிரிவில் இ2 இருக்கையில் தினந்தோறும் Google Sheet பதிவேற்றம் செய்யவும் UTIS வலைதளத்தில் குடிநீர் மற்றும் பாதாள சாக்கடை இணைப்புகள் பணி மேற்கொள்ளவும் தலைமை அலுவலகத்திலிருந்து கேட்கப்படும் படிவங்களை பூர்த்தி செய்து அனுப்பவும் ஒரு கணினி தேவையாக உள்ளது. அதன்படி, இ2 இருக்கைக்கு கணினி ஒன்று அரசு தரப்படுத்தப்பட்ட (Gem) விலை விகிதத்தில் ரூ. 60000/–ற்கு குடிநீர் நிதியிலிருந்து வாங்க மன்ற அனுமதி வேண்டப்படுகின்றது.

**அலுவலகக்குறிப்பு:**

அ) அரசு தரப்படுத்தப்பட்ட (Gem) விலை விகிதத்தில் வாங்க மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்க்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(2283/2022/இ1)

**தீர்மானம் எண். 131**

அனுமதிக்கப்பட்டது.

( 3 )

1. Resolved that the Commissioner, Rasipuram Municipality is authorized to borrow the loan amount of Rs.307.46 Lakhs at the flexible interest rate fixed by TUFIDCO Board / Government under "Special Road Programme" Funding scheme to implement the "Road works" at an estimate cost of Rs.600.00 Lakhs as per the terms and conditions prescribed by TUFIDCO.

| Name of the Project | Project cost | TUFIDCO'S LOAN under SRP |
|---|---|---|
| Package 1 – Providing BT surface at Namakkal road to Kattur, Kaliamman Koil Street, Vinayagam Street, Chettiyannan Street, V.Nagar Road No. 6 & 7, and CC Pavement at Madha Koil Street, Palani Street. | 167.38 | 110.53 |
| Package 2 – Providing BT surface at Koneripatti Extension II, Kamaraj Colony, Gandhi Nagar North to South Road, Koneripatti Ram Nagar North to South Road, Ramatheertham Lane, V.Nagar Road No. 4, Indhira Colony, Backward colony and CC Pavement at Gopal Street, Daily Market Lane and Kurankatti Street, Kandi venkatraman street and T.V.S. Lane. | 158.33 | 101.48 |
| Package 3 – Providing BT Surface at Vallalar Salai, West Colony, Ellappa Street No. 3, Varatharajulu Street, Thiru.ve.ka street, Weavers Colony East West and North South road, Marappan Thottam (E.B. Office Road), Kadhar Street, and CC Pavement at Sandhu Veeri Street,Chikka Street, Kadhar Street West, Angalamman Koil to Anna Salai. | 152.29 | 95.45 |
| **Total** | **478.00** | **307.46** |

2. The Municipality Commissioner, Rasipuram Municipality be and hereby authorized to execute the loan agreement and other documents, if any with TUFIDCO and complete all other formalities including affixing the common seal of the Municipality on the documents to be executed with TUFIDCO on behalf of the Rasipuram Municipality.
3. Resolved that the ULB account on the revenue collection such as property tax, professional tax and other revenue collections shall be escrowed in favour of TUFIDCO. This account will be in existence till the time of clearing the loan and other dues under this project to TUFIDCO.
4. Resolved that the Municipality Commissioner be and hereby authorized to make necessary budgetary provisions in the annual budget for the repayment of principal, interest and other money due for the loan availed for the project proposal to TUFIDCO.
5. Resolved to agree, to adjust by the Government of Tamil Nadu from funds receivable for Rasipuram Municipality such as Devolution grant payment under state Finance Commission recommendation, other grants, share on tax and stamp duties due from the state Government, in the event of default in repayment of principal, interest and other money due to TUFIDCO in respect of loans availed for these projects.

**OFFICE NOTE:** Council may approve the Resolution.

(4267/2019/E1)

**தீர்மானம் எண். 132**

அனுமதிக்கப்பட்டது.

( 4 ) இராசிபுரம் நகராட்சிக்குச் சொந்தமான ஈப்பு வாகனம் TN 28 AT 4555-ற்கு புதிய மின்கலன் வாங்கும் பணி மேற்கொள்ள விலைப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகள் பின்வருமாறு.

| வ.எண். | நிறுவனங்களின் பெயர் | தொகை |
|---|---|---|
| 1 | ஆண்டவர் ஆட்டோ எலக்ட்ரிக்கல்ஸ் & பேட்டரிஸ், இராசிபுரம் | ரூ. 7500/– |
| 2 | தீ பேட்டரிஸ், இராசிபுரம் | ரூ. 7900/– |
| 3 | அஷ்வாக் ஆட்டோ எலக்ட்ரிக்கல் ஒர்க்ஸ், இராசிபுரம் | ரூ. 8300/– |

அ) பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் ஆண்டவர் ஆட்டோ எலக்ட்ரிக்கல்ஸ் & பேட்டரிஸ், இராசிபுரம் என்ற நிறுவனத்தின் குறைந்த விலைப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

ஆ) இப்பணியின் அவசிய அவசரம் கருதி நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று பணியாணை வழங்கியதற்கு மன்றத்தின் அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

அ) மன்றம் அங்கீகரிக்கலாம்.
ஆ) இப்பணிக்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(1440/22/இ2)

**தீர்மானம் எண். 133**

அனுமதிக்கப்பட்டது.

( 5 ) இராசிபுரம் நகராட்சிக்குச் சொந்தமான ஈப்பு வாகனம் TN 28 V 9848 –25.04.1996 அன்று வாங்கப்பட்டது. இவ்வாகனம் வாங்கப்பட்டு 24 ஆண்டுகள் முடிந்துவிட்டது. மேற்படி ஈப்பு வாகனம் TN 28 V 9848 மார்ச் 2015 வரை இயக்கப்பட்டது. தற்போது இயங்கா நிலையிலுள்ள இவ்வாகனத்தை மோட்டார் வாகன பாராமரிப்புத் துறை, சென்னை மூ.மு.க.எண். எச்1/7739/2021 நாள் 26.07.2021 அவர்களின் கடிதத்தில் இவ்வாகனத்தை கழிவு செய்ய ஆணை வழங்கப்பட்டுள்ளது. எனவே, இவ்வாகனத்தை குறைந்தபட்சம் ரூ. 31,000/–க்கு விற்பனை செய்ய ஆணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே இவ்வாகனத்தின் மீது ஏலம் நடவடிக்கை தொடர மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

(2673/20/இ2)

**தீர்மானம் எண். 134**

அனுமதிக்கப்பட்டது.

(6) இராசிபுரம் நகராட்சி, பொது சுகாதாரப்பிரிவில் நகராட்சிக்குட்பட்டப் பகுதிகளின் தெருக்களிலுள்ள கால்வாய் மேற்பரப்பில் முட்புதர்கள் அதிகளவில் வளர்வதால், அதனை களைக்கொல்லி மருந்தினை பயன்படுத்தி புல்களை அகற்றுவதற்கு 25 லிட்டர் களைக்கொல்லி மருந்தினை வாங்கிக்கொள்ள ஆகும் செலவினத்தினை ஏற்பது குறித்து மன்றப்பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) நகர் மன்றத்தலைவரின் முன் அனுமதி பெற்று 25 லிட்டர் களைக்கொல்லி மருந்தினை வாங்கிக்கொள்ள ஆகும் செலவினத்தினை ஏற்பது குறித்து மன்றம் அனுமதி வழங்கலாம்.

**( 2678/22 /எச்1)**

**தீர்மானம் எண். 135**

அனுமதி வழங்கப்பட்டது.

(7) இராசிபுரம் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் பயன்படுத்தப்படும் டிப்பர் லாரி SWARAJ MAZDA வாகனம் எண். TN 28 AS 0104–இல் Self Motor பழுதடைந்துவிட்டதால், வாகனத்தை சீர்செய்து பயன்பாட்டிற்கு கொண்டு வருவதற்கான செலவினத்தினை ஏற்பது குறித்து மன்றப்பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) நகர் மன்றத்தலைவரின் முன் அனுமதி பெற்று வாகனத்தை சீர்செய்து மற்றும் செலவினத்தினை ஏற்பது குறித்து மன்றம் அனுமதி வழங்கலாம்.

**( 2672/22/எச்1)**

**தீர்மானம் எண். 136**

அனுமதி வழங்கப்பட்டது.

(8) இராசிபுரம் நகராட்சி, பொது சுகாதாரப்பிரிவில் பயன்படுத்தப்படும் வாகனம் LCV– Auto எண். TN 28 BW 9298–இல் CLUTCH Plate பழுதடைந்துவிட்டதால், CLUTCH Plate மாற்றுவதற்கும் மற்றும் வாகனத்திற்கு என்ஜின் ஆயில் சர்வீஸ் செய்து வாகனத்தை பயன்பாட்டிற்கு கொண்டு வருவதற்கான செலவினத்தினை ஏற்பது குறித்து மன்றப்பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) நகர் மன்றத்தலைவரின் முன் அனுமதி பெற்று CLUTH Plate மாற்றுவதற்கும் மற்றும் வாகனத்திற்கு என்ஜின் ஆயில் சர்வீஸ் செய்து கொள்வதை ஏற்பது குறித்து மன்றம் அனுமதி வழங்கலாம்.

**( 2673/22 /எச்1)**

**தீர்மானம் எண். 137**

அனுமதிக்கப்பட்டது.

(9) இராசிபுரம் நகராட்சிக்குட்பட்டப் பகுதியில் சேகரிக்கப்படும் மக்கும் கழிவுகளை நுண் உரக்கிடங்கில் மக்க வைத்து உரமாக்க, E.M Solution தேவைப்படுவதால், 100 லிட்டர் வாங்கிக்கொள்ள ஆகும் செலவினத்தினை ஏற்பது குறித்து மன்றப்பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) நகர் மன்றத்தலைவரின் முன் அனுமதி நகராட்சிக்குட்பட்டப் பகுதியில் சேகரிக்கப்படும் மக்கும் கழிவுகளை நுண் உரக்கிடங்கில் மக்கவைத்து உரமாக்க, E.M Solution தேவைப்படுவதால், 100 லிட்டர் வாங்கிக்கொள்ள ஆகும் செலவினத்தினை ஏற்பது குறித்து மன்றம் அனுமதி வழங்கலாம்.

(2674/22 /எச்1)

**தீர்மானம் எண். 138**

அனுமதி வழங்கப்பட்டது.

(10) இராசிபுரம் நகராட்சி, பொது சுகாதாரப்பிரிவில் அன்றாடம் பொதுமக்களிடம் மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பை என தரம் பிரித்து சேர்த்து வைக்கப்படுகிறது. அதில் சேகரிக்கும் நெகிழி கழிவுகளை தூய்மைப் பணியாளர்கள் சேமித்துக் கொடுக்க பெரிய அளவிலான சாக்குகள் (BOREO BAGS) 500 எண்ணிக்கை வாங்கிக்கொள்ள செலவினத்தினை ஏற்பது குறித்து மன்றப்பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) நகர் மன்றத்தலைவரின் முன் அனுமதி பெற்று அன்றாடம் பொதுமக்களிடம் மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பை என தரம் பிரித்து சேர்த்து வைக்கப்படுகிறது. அதில் சேகரிக்கும் நெகிழி கழிவுகளை தூய்மைப் பணியாளர்கள் சேமித்துக் கொடுக்க பெரிய அளவிலான சாக்குகள் (BOREO BAGS) 500 எண்ணிக்கை வாங்கிக்கொள்ள ஆகும் செலவினத்தினை ஏற்பது குறித்து மன்றம் அனுமதி வழங்கலாம்.

(2677/22 /எச்1)

**தீர்மானம் எண். 139**

அனுமதிக்கப்பட்டது.

(11) இராசிபுரம் நகராட்சி, பொது சுகாதாரப்பிரிவில் மலேரியா பிரிவு, தற்போது பருவ மழைகாலம் தொடங்கி விட்டதால், மலேரியா, டெங்கு நோய்கள் பரவலை கட்டுப்படுத்துவதற்காக மலேரியா பிரிவில் DBC பணிக்கு மகளிர் சுய உதவிக் குழுக்களிலுள்ள 30 நபர்களை மேலும் 6 (ஆறு) மாத காலத்திற்கு பணியமர்த்திக்கொள்ள நகர் மன்றத்தலைவரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதற்கு மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

(1550/18 /எச்1)

**தீர்மானம் எண். 140**

அனுமதிக்கப்பட்டது.

(12) தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 82–இன்படியும் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை அரசாணை எண். 52, நாள் 30.03.2022 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கையின்படி 01.04.2022 முதல் சொத்துவரி / காலி மனைவரி சீராய்வு மேற்கொள்ள கால நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. அதன்படி இராசிபுரம் நகராட்சிக்கான சொத்து வரிவிதிப்பு காலிமனை வரிவிதிப்பு மண்டல அடிப்படையில் வரிவிதிப்பு செய்ய பொது மக்களுக்கு சொத்துவரி / காலி மனைவரி சுய மதிப்பீட்டுப் படிவங்கள் வழங்கி படிவத்தை பூர்த்தி செய்து 15.06.2022–க்குள் திரும்ப பெறப்பட்டு கணினியில் பதிவு செய்து 15.06.2022–க்குள் திரும்ப பெறப்பட்டு கணினியில் பதிவு செய்து 30.06.2022–க்குள் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு அறிக்கை சமர்ப்பிக்க தெரிவித்துள்ளார். தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15–இன்கீழ் மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி VEERVARI என்ற நிறுவவனத்திற்கு பணியாணை வழங்கியதையும் ரூ. 17663/– சுய மதிப்பீட்டுப் படிவம் பூர்த்தி செய்த வகையில் ரூ. 208423/– வழங்க மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) பணியின் அவசர அவசியம் கருதி மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15–இன்கீழ் தொகை வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

(1879/22 /அ1)

**தீர்மானம் எண். 141**

அலுவலகக்குறிப்பு ஏற்கப்பட்டது.

(13) இராசிபுரம் நகராட்சி சொத்துவரி சீராய்வு 2022 தொடர்பாக சுய மதிப்பீட்டுப் படிவம்–1 குடியிருப்பு கட்டடங்களுக்கு (இளம் நீல நிறம்) படிவம்–2 வணிக பயன்பாட்டுக் கட்டடங்களுக்கு (இளம் சிவப்பு நிறம்) படிவம்–3 தொழிற்சாலை பயன்பாட்டுக் கட்டடங்களுக்கு (வெள்ளை நிறம்) படிவம்–4 சுய நிதி பள்ளி கல்லூரிகளுக்கு (இளம் பச்சை) படிவம்–5 காலி மனைகளுக்கு (இளம் மஞ்சள்) ஆகிய இனங்களுக்கு அச்சடிக்க உள்ளூர் விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்காணும் அச்சகத்திலிருந்து விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| 1) | பாரத் பிரிண்டர்ஸ், 6, CPK நாயுடு தெரு, இராசிபுரம். | ஏ4 கலர் பேப்பர் மற்றும் F&B பிரிண்டிங் உட்பட 1 பேப்பர் விலை | ரூ. 2.25 |
| 2) | கார்த்திக் கார்ட்ஸ், 81 S, பெரிய கடைவீதி, இராசிபுரம். | 75 GSM பேப்பர் இரண்டு பக்கம் பிரிண்ட் கொண்ட படிவம் அச்சடிக்க | ரூ. 2.10 |
| 3) | சித்ரா பிரஸ், 92, பெரிய கடைவீதி, இராசிபுரம். | ஏ4 கலர் பேப்பர் 2 பக்கம் பிரிண்டிங் படிவம் 1 விலை | ரூ. 2.00 |

வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் வ.எண். 3–இல் காணும் சித்ரா பிரஸ் விலைப்புள்ளி மிக குறைவாக கொடுக்கப்பட்டுள்ளது. எனவே, மிக குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள சித்ரா பிரஸ் நிறுவனத்திற்கு பணியாணை வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ)  பணியின் அவசர அவசியம் கருதி நகர் மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று பணியாணை வழங்கியதையும் தொகை வழங்கியதையும்  மன்றம் அனுமதிக்கலாம்.

(1420/22 /அ1)

**தீர்மானம் எண். 142**

அலுவலகக்குறிப்பு ஏற்கப்பட்டது.

ஒம்/— இரா. முனைவர் கவிதா சங்கர்,
நகர் மன்றத் தலைவர்.

/ உண்மை நகல் /

ஆணையாளர்,
இராசிபுரம் நகராட்சி.